27th August 1970]

திரு. தெய்வசிகாமணி அருணுசல தேசிகர் : துணைத் தலைவர் அவர்களே, பேணுதல் கட்டணத்தை மாணவர்களுடைய வசதிக்காகப் பயன்படுத்த வேண்டிய நிதியிலிருந்து இப்போது எடுத்திருக்கிருர்கள். திரு. அறிவழகன் அவர்கள் சொன்ன மாதிரி, ஏற்கெனவே மாணவர்கள் தங்கள் தனித் திறன்களை, புத்திசாலித்தனத்தை வளர்த்துக் கொள்ளுவதற்கான வாய்ப்பு மிகவும் குறைவு. அறிவியல் நூல்களை வாங்க வழியில்லை. இந்த நிலையில் அதிலிருந்து 5 ரூபாய் எடுத்தால், மாணவர்கள் வஞ்சிக்கப்படுவார்கள். அதனுல் அவர்கள் வாய்ப்பு எதிர்காலத்தில் குறைந்துவிடும். நல்ல புத்திசாலித்தனத்தை வளர்க்கும் திறன் அவர்களிடையே பாதிக்கப்படும். எனவே வேறு நிதியைத் தேடிக் கொள்வதுதான் சரி என்பதை அரசாங்கம் பரிசீலிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் : இதிலிருக்கிற சங்கடமே வேறு நிதியாக வசூலிக்க வேண்டுமென்ருல், கட்டணத்தை உயர்த்தியாக வேண்டும். அதாவது, தற்போது ரூபாய் 16.50 என்பதற்குப் பதில் ரூபாய் 21.50 வாங்க வேண்டும். மாணவர்களுக்கு வைத்திருக்கிற ரூபாய் 16.50 கட்டணமும் உயரக் கூடாது, பேணுதல் நிதியும் எடுக்கப்பட வேண்டும் என்ருல், முறைப்படி அரசு கொடுக்கிற பணம் மட்டும் போதாது என்ற இக்கட்டான நிலை வருவதால்தான், ஓரளவுக்கு அதிகமாக இந்தத் தொகைக்கு ஒதுக்கிவிட்டு, மீதித்தொகையைப் பேணுதல் கட்டணமாகப் பயன்படுத்தலாம் என்று வைக்கப்பட்டிருக்கிறது. அதே நிலையில் லிட்டரரி அசோசியேஷன், லைப்ரரி இவைகளுக்காக வசூலிக்கப்படும் பணம் முழுவதும் அந்தத் துறைகளுக்கே பயன்படுத்தப்படும் நிலை இருக்கிறது. பேணுதல் முறை மூலமாக பணிகளைச் செம்மையாகச் செய்ய வேண்டும். அதுவும் ரூபாய் 16.50-க்குள் அடங்க வேண்டும் என்றுதான் அட்வைசரி கமிட்டியில் எல்லோருடைய ஆலோசனையையும் பெற்று ஆணையாகக் கொண்டுவரப் பட்டிருக்கிறது. இந்த முறை இப்போது எல்லோராலும் வரவேற்கத் தக்க சூழ்நிலையில் இருந்து வருகிறது.

S.M.S.M. High School in Sucheendram

*14. *Q.*—THIRU M. SANKARALINGAM PILLAI : Will the Hon. the Minister for Education and Health be pleased to state :

(*a*) whether any representation was received from the Management of S.M.S.M. High School in Sucheendram of Kanyakumari district, that a teacher with eight years of continuous service was discharged from service due to the orders of the Government fixing the cadre strength of posts ; and

(*b*) the action taken thereon ?

[27th August 1970

சுசீந்திரம் S. M. S. M. உயர்நிலைப் பள்ளி

திரு. எம். சங்கரலிங்கம் பிள்ளை : மாண்புமிகு கல்வி—சுகாதார அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டு கிறேன் :

(அ) கன்னியாகுமரி மாவட்ட சுசீந்திரம் எஸ்.எம்.எஸ்.எம் உயர் நிலைப் பள்ளி ஆசிரியர் எண்ணிக்கை (Staff fixation) நிர்ணய உத்தரவால் எட்டு ஆண்டுகள் தொடர்ந்து வேலை பார்த்து வந்த நிரந்தர ஆசிரியர் ஒருவர் வேலையிலிருந்து வெளியேற்றப்பட்டுள்ளார் என்று அப்பள்ளி நிர்வாகியிடமிருந்து முறையீடு வந்ததுண்டா ?

(இ) அம்முறையீட்டின் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) 2 அதிகப்படியான நடுத்தரப்பள்ளி ஆசிரியர்களையும் 1 உயர் நிலைப்பள்ளி ஆசிரியரையும் 1968-69-ம் வருடத்தில் தொடர்ந்து பணி யில் வைத்துக் கொள்ள அப்பள்ளிக்கு தனி முறையாக அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

Tamil Teachers with Post-Graduate Qualification

*15. *Q.*—THIRU M. SANKARALINGAM PILLAI : Will the Hon. the Minister for Education and Health be pleased to state :

(*a*) whether the usual grant of two advance increments to the highly qualified teachers is denied to any of the Tamil Teachers, working in Government (Board) High School in Tirunelveli district for the reason that they do not have the B.T. qualification though they have the post-graduate qualification ; and

(*b*) if so, whether there is any proposal to grant such advance increment to those Tamil Teachers as they have the necessary training for language teachers ?

எம். ஏ. பட்டம் பெற்ற தமிழாசிரியர்கள்

திரு. எம். சங்கரலிங்கம் பிள்ளை : மாண்புமிகு கல்வி—சுகாதார அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டு கிறேன் :

(அ) தமிழாசிரியர்களாகப் பணி புரிபவர்களில் எம். ஏ. பட்டம் பெற்ற பின்னர் பி.டி. பயிற்சி பெறவில்லை என்ற காரணம் காட்டி, உயர் படிப்புடையவர்களுக்கு வழங்கும் இரண்டு ஊதிய உயர்வு, திருநெல்வேலி மாவட்ட இன்றைய அரசினர் உயர்நிலைப் பள்ளி (முன் னாள் கழகப் பள்ளி) ஆசிரியர்களில் எவருக்கேனும் இரண்டு ஊதிய உயர்வு மறுக்கப்பட்டிருக்கிறதா ?

(இ) ஆம் எனில், தமிழாசிரியர்கள் மொழியாசிரியர்கள் பயிற்சி பெற்றிருப்பதால் அவர்களுக்கும் இவ்வூதிய உயர்வு வழங்கும் செயற் குறிப்பு ஏதேனும் உண்டா ?